Registered as a Newspaper

பிரத்தியேக வகுப்புகள்
A/L 1988/89
இரசாயனம்
ஆசிரியர்:- திரு. மக்லி
இடம்:- No 10, 3rd Lane, A.V. Road, Colombogam.
A/L 88, மாணவர்களின் நலன் கருதி, கிழமையில் 6 வகுப்புகள் நடத்தப்படும்
பகுதிகள்:-
(1) சேதனஇரசாயனம்
(2) பௌதிகஇரசாயனம்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

A/L 1989
இரசாயனம்
விரைவில் ஆரம்பம்
ஆசிரியர்:-
திரு. மக்லி
இடம்:-
No. 10, 3rd Lane,
A. V. Road,
COLOMBOGAM.

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு புரட்டாதி மீ 09 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 01 (25 – 09 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 259

# தமிழ்ப் பொலிஸ் படையுடன் கூடிய இடைக்கால அரசு தான் வேண்டும்

## அரச அதிபர் நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆலோசனைச் சபை அல்ல

### புலிகள் இந்தியாவிடம் வற்புறுத்து

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 25

தமிழ்ப் பொலிஸ் படையுடன் கூடிய இடைக்கால அரசாங்கம் ஒன்றே தேவை. அரசாங்க அதிபரின் நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆலோசனைச் சபை அல்ல.

—இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவிடம் வலியுறுத்தி உள்ளனர். புதன்கிழமை பலாலி இராணுவ முகாமில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தியத் தூதுவர் திரு. டிக்ஷிற்றிடம் இவ்விடயம் எடுத்துரைக்கப்பட்டது.

புதன்கிழமைச் சந்திப்பின்போது திரு டிக்ஷிற் இடைக்கால நிர்வாக அமைப்பு, அதிகாரங்கள் பிரதிநிதித்துவம் ஆகியன பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன ஒரு திட்டம் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். அதன் விபரங்களையும் வெளியிட்டார்.

இந்த நிர்வாக சபை 12 அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் அதில் பிரதம நிர்வாக அதிகாரியும், வடக்கிற்கும் கிழக்கிற்குமாக இரு நிர்வாக அதிகாரிகளும் அடங்குவர். விடுதலைப் புலிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த புதன்கிழமை பலாலி முகாமில் இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஷிற்றை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் [உ]
(படம்: ஜெயம்)



முச்சந்தி முரளி

முந்திக் கொழும்பு அரசோடை நடந்து கொண்டமாதிரி இப்ப புலியளோடை நடக்கிறது எண்ட முடிவு எடுத்திட்டினம் போலை... !

### உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் போட்டி

வடமாராட்சி, செப். 25

திலீபனுக்கு அடுத்ததாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் போட்டி போடுகிறார்கள்.

இதனால் அடுத்தவர் யார் என்பதைச் சீட்டுக் குலுக்கல் முறையிலேயே தெரிவு செய்யப்பட வேண்டியதாயிற்று.

இத் தகவலை புலிகள் பிரமுகர் கவிஞர் காசி ஆனந்தன் வல்வையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

(உ-ஒ-160)

### சைக்கிள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 25

புலிகளின் ஐந்து அம்சக்கோரிக்கையை வலியுறுத்தியும், திலீபனின் உண்ணாவிரதப் போருக்கு ஆதரவு தெரிவிதும்

(6ம் பக்கம் பார்க்க)

### டிக்ஷிற் ஜே. ஆர். சந்திப்பு

கொழும்பு, செப். 25

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை இந்தியத் தூதர் டிக்ஷிற் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துத் தெரிவித்தார்.

(உ-எ)

# இந்திய தகவல் சாதனங்கள் புலிகளை அவமதிக்கின்றன

## ராஜீவிடம் பிரபா புகார்

யாழ்ப்பாணம், செப் 25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவமதிப்புச் செய்யும் விதத்தில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய வானொலியும் தூரதர்ஷனும் ஈடுபட்டுள்ளன என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே பிரபாகரன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு முறையிட்டிருக்கின்றார்.

திரு. பிரபாகரன் இது தொடர்பாக பிரதமர் காந்திக்கு அனுப்பிய கடிதம் வருமாறு:

எமது இயக்கத்தை அவமதிப்புச் செய்யும் வகையில் குரோதமான முறையில் திட்டமிட்ட பிரசாரம் ஒன்றை அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள இந்திய வானொலியும் தூரதர்ஷனும் ஆரம்பித்துள்ளன என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

திரிபுபடுத்தப்பட்ட,

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25-09-1987
புரட்டாதி 09
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6.02 முதல் 7.32 வரை
ராகுகாலம்:-
10.32 முதல் 12 02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## குருநகரில் 5 இளைஞர் உண்ணாவிரதமிருப்பர்

குருநகர், செப். 25

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து சாகும்வரை உண்ணாவிரத வேள்வியில் தீய்ந்து கொண்டிருக்கும் திரு இ. திலீபனின் சாத்வீகப் போராட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வண்ணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நான்கு நாட்களுக்கு ஐந்து இளைஞர்கள் நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதம் இருக்க முன்வந்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உணர்வு இழக்கும் நிலையில் திலீபன்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. திலீபனின் உண்ணாவிரதம் இன்று பதினொராவது நாளை அடைந்திருக்கிறது.

நேற்றுக்காலை திலீபன் பேச முயற்சித்தார். இரண்டொரு சொற்களே தெளிவில்லாமல் வெளிவந்தன. எனினும் அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. சைகை மூலம் கைகளை அசைத்துக் காட்டிவிட்டு சிறிது நேரத்தில் மயக்கம் அடைந்து விட்டார்.

இவரது உடல்நிலை மிக மோசமான நிலையை அடைந்து கொண்டிருப்பதாகவும், உணர்வு முற்றாக இழக்கும் ('கோமா') நிலைக்கு அவர் வந்து கொண்டிருப்பதாகவும் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

(ஒ-160)

### இந்தியப் படையினரால்

# ரெலோ இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைது!

## விளக்க மறியலில் வைக்க உத்தரவு

வவுனியா, செப். 25

ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளுடன் நடமாடியதாகக் கூறப்படும் ரெலோ இயக்க இளைஞர்கள் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட நீதிவான் திரு. எஸ். நாகராஜா முன்னிலையில் இவர்களை மாங்குளம் பொலிசார் ஆஜர் செய்தார்கள்.

இதுபற்றி மேலும் தெரிய வந்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் உள்ள வெள்ளாங்குளம் மூன்றும்பிட்டி என்னும் இடத்தில் இடம் பெற்ற இயக்க மோதலைத் தொடர்ந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் தமிழ் பகுதி எங்கும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐந்தம்சக் கோரிக்கையை ஆதரித்து தமிழ்ப் பகுதி எங்கும் உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சற்கோவளம், உடுத்துறை, கரணவாய், கம்பர்மலை, வல்வெட்டி, கொடிகாமம், சாவகச்சேரி, பளை, புங்குடுதீவு, அரியாலை, அச்சுவேலி, ஆவரங்கால் உட்பட ஏராளமான இடங்களில் தொடர் உண்ணாவிரதங்கள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை நேற்றுக் காலை சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆயிரக்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தபாலகங்கள் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், செப். 25

யாழ் மாவட்டத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் யாவும் நேற்று முதல் இயங்கத் தொடங்கியுள்ளன.

திலீபனின் உண்ணாவிரதத்தையடுத்து யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசாங்க அலுவலகங்களும் ஸ்தம்பிதமடைந்து இருந்தன.

(ஒ-160)

உங்களுக்கு அவசியமான
மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்களை

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ அனேக ரக சீட் வகைகள் ரூ. 75/ இலிருந்து
★ சொக் அப்சோபர் ★ மட்காட்
★ ஹெல்மெட் வகைகள் ★ கிறுஷ்பார் வகைகள்
★ விசேட அலங்காரப் பொருட்கள்

உட்பட பல நூற்றுக்கணக்கான அவசியமான பொருட்களை மிக நியாயமான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே தொடர்பு கொள்ளவும்.

KELANI VALLEY MOTOR CO.,
634, Maradana Road,
COLOMBO-10.
T-phone : 597005



புகைப்படம் பலாலியில் புதனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற் தலைமை வகிப்பதையும். இடப் புறத்தில் தென்னிந்தியத் தளபதி திபெந்தர்சிங், மேஜர் ஹர்கீரத்சிங், கப்டன் குப்தா (பின்னால்) ஆகியோரையும்;
வலப் புறத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் திரு. மாத்தையா, திரு. வே. பிரபாகரன், திரு. அன்ரன் பாலசிங்கம் திலகர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.
(படம்: ஜெயம்) (ஒ)

இளைய தலைமுறையில் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வகுப்புகள்

விஷேட ஆங்கில வகுப்பு Reading, Writing, Listening and Spoken English with Grammer ஆரம்பம்:- 26-09-1987 ஆசிரியர்:- திரு. S. பத்மநாதன்- Able Technical Studies, K. K. S. Road Chunnakam.

### வீட்டு மிருகம்

ஜேர்மன் அல்சேஷன் ஆண் நாய் என்னிடம் உண்டு. பெண் நாய்க்கு குரொஸ் பண்ணிக் கொடுக்கப்படும். விபரம் சி. யேசுதாசன், J.L.D. ரவல்ஸ், தொழிற் பேட்டை வீதி, அச்சுவேலி.

### தேவை

இன்று இலங்கையில் முன்னிலை வகிக்கும் பயன்களுக்கு பிறேசியர் தையல் செய்யக்கூடிய மாநகர எல்லைக்குள் வசிக்கும் பெண்கள் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். நியூ அங்கலின் இன்டஸ்றீஸ், இல. 7/1 புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (1527)


### கொழும்புத்துறையில்

யாழ்ப்பாணம், செப். 25

கொழும்புத்துறை கிழக்குச் சட்டம்பித் தறை ஸ்ரீவிசாசப் பெருமான் (முருகன்) ஆலயத்தில் நவராத்திரிபூசை நிகழ்ச்சிகள் கடந்த புதன் கிழமை மாலை ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. (ஒ)


ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது

## ரிஷி அஜமாமிச லேகியம்

முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது

அதன் பயன்கள்:-



இல்வாழ்க்கையில் சிறந்த இன்பம் பெறவும், இழந்த சக்தியை மீட்டுக் கொடுப்பதுடன், எல்லா நரம்புகளையும் முறுக்கேற்றி வீரிய விருத்தியைச் கொடுக்க வல்லது. தளர்ச்சி, சோர்வு, களைப்பு, சிறுபிராயத்தில் அறியாமல் செய்த கெட்டசெய்கையாலும், வாலிப பருவத்தில் மிதமீறிய தாம்பத்தியத்தாலும், வயதான காலத்தில் உடல் சக்தியையும், ஆண்தன்மையையும், இரத்தம் குறைந்து, மனச்சோர்வடைந்து இருப்பவர்களையும் ரிஷி அஜமாமிச லேகியம் சாப்பிடுவதினால் புதுச் சக்தியைப் பெற்று, இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு சிறந்த காய கல்ப மருந்து, சக்தியையும், உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தருகிறது.

250 கிராம்:- ரூபா 60/-
500 கிராம்:- ரூபா 110/-
தபால் செலவு ரூபா 10/-

**DR. T.D. மதுரநாயகம்**
D. A. M. (Cey,) M. Ac. F. (Cey)
**ஞானசுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11


கந்தளாய் குளம் உடைப்பு:

# தமிழரில் அரைவாசிப் பேருக்கு மாற்று நிலமோ, வீடோ இல்லை

## ஆனால் நிவாரணம் என்ற பெயரில் சிங்களவர்கள் குடியேற்றம்

திருகோணமலை, செப். 25

கந்தளாய்க்குள உடைப்பினால் வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்த தமிழர்களில் அரைவாசிப் பேருக்கு மாற்றுநிலமோ வீடுகளோ நிவாரண உதவிகளோ வழங்கப்படவில்லை.

ஆனால் கந்தளாய்க்குள உடைப்புக்கு நிவாரணம் என்ற பெயரில் அல்லைக் கந்தளாய் வீதியில் ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்களைப் பெரும் செலவில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன.

—இவ்வாறு சந்தளாய்ப் பகுதித் தமிழர்கள் முறையீடுசெய்திருக்கின்றனர்.

இவர்களது முறைப்பாடுகள் ஜனாதிபதிவரை அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கந்தளாய்க்குள உடைப்பினால் தமிழர்களின் புராதன கிராமமான 'கோவில் கிராமமே' பெரிதும் அழிவுற்றது.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 80 சதவீதத்திற்கு அதிகமானோர் தமிழர்களே.

ஆனால் நிவாரண உதவிகள் தமிழர்களுக்குச் சரிவர வழங்கப்படவில்லை.

வீடுகளை இழந்த நூறு தமிழர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தர அரசு இணங்கியிருந்தது.

ஆனால் இதுவரை 41 வீடுகளே தமிழர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் சுமார் ஆயிரம் தமிழர்களும் ஐநூறு முஸ்லிம்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். பாதிப்புற்ற சிங்களவர் எண்ணிக்கை மிகக் குறைவு.

ஆனால் கந்தளாய்க்குள உடைப்பு நிவாரணம் என்ற பெயரில் 7 ஆயிரத்து 500 பேருக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுவருகிறது. (உ)

## மரக்கன்றுகள் விநியோகம்

வட்டுக்கோட்டை, செப். 25

சங்கானை தொட்டிலடி 'விவசாயமன்னன்' திரு. அ. வீரசிங்கம் கமத்தில் விவசாயத் திணைக்களத்தினால் நிறுவப்பட்ட நாற்று மேடையில் இருந்து எலுமிச்சை, மாதுளை, பலாமரம், அகத்தி முதலானவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எலுமிச்சைக்கன்று 10 ரூபா வீதமும், மாதுளங் கன்று 10 ரூபா வீதமும் பலாமரக் கன்று 6 ரூபா வீதமும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-161)

## தமிழர் — முஸ்லிம்களை பிரித்து குடியேற்றத்தை தொடர முஸ்தீபு

### பிரசைகள் குழுத் தலைவர் சொல்கிறார்

கல்முனை, செப். 25

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின் இலங்கை அரசு வழக்கம் போல உறுதியற்ற நிலையில் இருப்பதைப் போன்று தெரிகின்றது அத்தோடு மாத்திரமல்லாது கிழக்கில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்து வைத்து சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்து நடத்துவதற்கு முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றன.

அக்கரைப்பற்று பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளன மாநாடு அக்கரைப்பற்று கிராம அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கரைப்பற்று பிரசைகள் குழுத்தலைவர் ஜனாப். ஏ. எம். அகமது லெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கை இந்திய ஒப்பந்தம் பூரணமாக அமுல் நடத்தப்படுமா? என்ற கேள்விக் குறி தமிழ் பேசும் மக்களிடையே எழுந்துள்ளது.

ஏனெனில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சுமார் இரண்டு மாதங்களாகியும் அரசியல் கைதிகள் விடுதலையே ஒழுங்காக நடைபெறவில்லை. ஒப்பந்தத்தின் அமுலாக்கல் சரத்துக்கள் பற்றிய பேச்சுவார்த்தைகள் பல சட்டங்களாக நீண்டு கொண்டு செல்கின்றன.

அரச உயர் மட்டத் தலைவர்கள் ஒப்பந்தத்திற்கெதிராக முஸ்லிம் நடாளுமன்றப் பிரதிநிதிகளைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகளும் தெரிகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

மற்றும் வண. பிதா அன்னதாஸ், எஸ் ஐ. மூர்த்தி ஆகியோருட்பட பலரும் பேசினர். (ஒ-84)

## இசைக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகளை உடன் பெற்றுத் தருக!

### இசை வேளாளர் சங்கம் கோரிக்கை

காங்கேசன்துறை, செப் 25

இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்டும் காணாமற்போயும் கொள்ளையடிக்கப்பட்டும் அழிந்துபோன இசைக் கருவிகளை உடன் தமிழகத்திலிருந்து பெற்றுத் தந்து இசைக் கலைஞர்கள் தமது தொழிலை மேற்கொள்ள உதவுக.

இவ்வாறு இலங்கை இசைவேளாளர் சங்கம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையில் மேலும் கோரப்பட்டுள்ளதாவது;

இராணுவ நடவடிக்கையின்போது நாதஸ்வர -தவில் இசைக் கருவிகள் பலவும், வயலின், புல்லாங்குழல், வீணை மற்றும் கருவிகளும் சேதமாக்கப்பட்டும் கொள்ளையடிக்கப்பட்டும் காணாமற்போயுமுள்ளன.

இந்நிலையில் இசைக் கலைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுத் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இகனல் இக்கருவிகளை இந்தியாவிலிருந்து பெற்றுத் தந்து, இசைக் கலைஞர்களின் கஷ்டத்தைப் போக்கவேண்டும். அவர்கள் தொழில் செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்ற உதவவேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-68)

## சாரணர் சின்னம் சூட்டுவிழா இன்று

சித்தன்கேணி கணேச வித்தியாலயக் குருளைச் சாரணர்களுக்கான சின்னஞ் சூட்டுவிழா இன்று காலை 9-30 மணியளவில் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. நா. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறும்.

காங்கேசன்துறை மாவட்டச் சாரண ஆணையாளர் திரு என். போஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சாரணர்களுக்கான சின்னங்களைச் சூட்டுவார்.

வட்டுக்கோட்டைக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா, சுழிபுரம் கொத்தணி அதிபர் திரு க. அருணாசலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஒ-161)

## "பாடசாலையை மாற்றக் கூடாது என்பதில் அக்கறையாக இருந்தேன்"

யாழ்ப்பாணம், செப். 25

நெருக்கடியான காலகட்டத்தின் பேறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முடிவிற்கிணங்க, எமது கல்லூரியை வேறொரு இடத்துக்கு மாற்றக் கூடாது என்பதில் நான் மிகவும் பிடிவாதமாக இருந்தேன்.

அண்மையில் நடந்த யாழ் மத்திய கல்லூரியின் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில்பேசும்போது தலைவர் வே. பாலசுந்தரம் (அதிபர்) இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நெருக்கடியான நேரத்தில் பக்கபலமாகஇருந்து ஒத்துழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சகல சிற்றூழியர்களுக்குஎனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி மரணமான மாணவர் தலைவன் பொன்னம்பலம் விபுலானந்தனின் மறைவுக்குஇரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ)

## இந்திய வம்சாவழி தமிழர்களும் ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து புதன் கிழமையன்று ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மனோஹரா தியேட்டர் அருகில் ஆரம்பமான ஊர்வலம் நல்லூரைச் சென்றடைந்தது. (ஒ)

## பிரிவுபசார விழா

கிளிநொச்சி, செப் 25

கிளிநொச்சி கொத்தணி அதிபராகப் பதவி வகித்து அண்மையில் நெடுந்தீவு கொத்தணி அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. இரா. சின்னத்தம்பியின் பிரிவுபசார விழா அண்மையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இவரது உருவப் படத்தை கல்வி அதிகாரி திரு. எஸ். சுமலநாதன் திரைநீக்கம் செய்து வைத்தார். (ஒ-76)

## சுழிபுரத்தில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப். 25

சுழிபுரம் கம்பளை அருள்மிகு ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் தினசரி மாலை நவராத்திரி பூசைகளும், தீப ஆராதனைகளும் விசேட பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றன, அத்துடன் பஜனைச் சபையாரால் நடத்தப்படும் தேவாரப்போட்டியிலும், மனனப்போட்டியிலும் வெற்றிபெறுவோருக்கு இறுதிநாள் பரிசில்கள் வழங்கப்படும். (ஒ)

## உண்ணா விரதத்தை கைவிட்டனர்

யாழ்ப்பாணம், செப் 25

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க, உண்ணாவிரதம் இருந்துவந்த பெண்கள் இருவர் உண்ணாவிரதத்தைப் புதனன்று கைவிட்டனர்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகியோரே அவர்கள்.

திலீபனுக்கு ஆதரவு தெரிவித்து நல்லூரில் இவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 25

கல்வி பொ. த. உயர்தர இந்து நாகரிக மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 15 தொடக்கம் பி. ப. 3. 30 வரை யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன், சமஸ்கிருதத் துறைத் தலைவர் திரு. வி. சிவசாமி, விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன், திரு. சு. சொக்கலிங்கம், பண்டிதர், மு. கந்தையா கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு. க. சி. குலரத்தினம் ஆகியோர் உரையாற்றுவர்.

நல்லூர் கல்விவள நிலையத்தின் ஏற்பாட்டிலே நடைபெறும் இக் கருத்தரங்கில் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தொடக்கவுரையும் மயிலங்கூடலூர் பி. நடராஜன் நன்றியுரையும் ஆற்றுவர். (ஒ-க)

## மாணவர்களின் ஊர்வலம்

யாழ்ப்பாணம்: செப்.25

திலீபனின் உண்ணாவிரதக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் அவரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் புதனன்று மாபெரும் ஊர்வலம் ஒன்றை மாணவர்கள் நடத்தினர்.

பாடசாலைகளின் சார்பில் பல மகஜர்கள் யாழ் கோட்டையிலுள்ள இந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன.

இறுதியில் மாணவர்கள் அங்கிருந்து நல்லூருக்கு ஊர்வலமாகச் சென்றனர். [ஒ]


**MADRAS**
CHRISTIAN COLLEGE
TAMBARAM.


The alumni of Madras Christian College are kindly requested to send in their names and addresses to the undersigned at your earliest in order to revive the M. C. C. Alumni Association in Jaffna, and to celebrate the 150th Anniversary of the College in a suitable way.

THANK YOU.

A. Kadirgamar
Principal
Jaffna College
VADDUKODDAI.



## 45ம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**க. கணேசநாதன்**
ஆசிரியர், வயாவிளான் ம. மகா வித்தியாலயம்.

மலர்வு: 21-7-1946 உதிர்வு: 12-8-1987

எங்கள் அன்புத் தெய்வம் கணேசநாதனின் அந்தியேட்டிக் கிரியைகள் 25-9-87 வெள்ளிக்கிழமை கீரிமலையிலும் 26-9-87 சனிக்கிழமை அவரின் இருபாலை இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டு, பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(1706) --- குடும்பத்தினர்.



# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா ★

● கீழ்க் குறிப்பிட்டுள்ள தொழில் வாய்ப்புகள் எம்மிடம் உண்டு.

★ கோழிப் பண்ணைத் தொழிலாளர். ★

சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S.R

மேலதிக வேலைகளுக்கு (OVER TIME) சம்பளம் வழங்கப்படும்.

## T. இந்திரநாதன்
## M. THREE TRAVELS

"சற்குணவாசா" 96, கச்சேரி நல்லூர் வீதி, கல்லூரி வீதி - சோதிலேன், நல்லூர் - யாழ்ப்பாணம். காங்கேசன்துறை. (முத்திரைச் சந்திக்கு அருகாமையில்) (BUS வழி இல. 769)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மொழியாலும் கலாசாரத்தாலும் இணைந்த வடக்கு, கிழக்கு மக்கள்

## பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பேராசிரியர் சாட்டை

"தமிழ் அமைச்சராக அரசின் உயர் பீடத்தில் இருந்து கொண்டு தமிழர்களின் நியாயமான உரிமைகளைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாவிட்டாலும் கூட—பிரதேசவாதம் பேசி"—தமிழ் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி —'சுய அரசியல் லாபம்' தேடும் போக்கினை இச்சூழ்நிலையிலாவது நிறுத்தக் கூடாதா?"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகக் கல்வித் துறைத் தலைவரும் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் உதயன் ஊடாக உள்நாட்டமைச்சர் கே. டபிள்யூ. தேவநாயகத்தைக் கேட்டுக் கொண்டார்.

"வடக்குத் தமிழருக்குக் கிழக்கில் தாயகமில்லை" என்ற தேவநாயகத்தின் அறிக்கை உதயனில் வெளியிடப்பட்டிருந்ததல்லவா?

இந்த அறிக்கை தொடர்பாகவே பேராசிரியர் இக்கருத்தினை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்குக் கிழக்கு முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தத் திட்டமிட்டுள்ளதே பிரச்சினைக்குக் காரணமாகவுள்ளதென்று தேவநாயகம் கூறுவது "நித்திரைபோல் கிடப்பவனை எழுப்புகின்ற நிலை" போல் தெரிகிறது.

இனவாதத்தின் தோற்றம்—அது வளர்க்கப்பட்ட வரலாறு அதன் பின் பேரினவாதமாக அது மாற்றமடைந்த முறை — தொடர்ந்து தமிழ் மக்களின் புறக்கணிப்பு — இறுதியாக கல்வியிலும் தரப்படுத்தல் — அத்தோடு அரசியல்தாக்கம் - தற்போது எமது துர்ப்பாக்கிய நிலை என முழு வரலாற்றையும் தெரிந்து கொண்டும்—

எதற்கோ 'வக்காலத்து' ப்பேசும் தன்மையில் பிரச்சினையை வேறு யாருடைய தலையிலோ சுமத்திவிடும் தன்மை கண்டிக்க வேண்டியது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து ஏறக்குறைய இருபது வருடகாலமாகப் பிரதிநிதித்துவத்தை வகித்த கிழக்கு மாகாணத்தவர்களான திருவாளர்கள் இராஜமாணிக்கம், இராஜவரோதயம், ஏகாம்பரம் போன்ற தலைவர்கள் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளாகவே—தந்தை செல்வநாயகத்தின் தலைமையை ஏற்றே—அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதனை முதலில் மனம் கொள்ள வேண்டும்.

தமிழர்களின் வரலாற்றினைத் திரிபுபடுத்தி—புதிய வரலாற்றைக் கூற முனைவது — தமிழ் மக்களை மேலும் பிளவுபடுத்திப் பிரிக்கமுனையும் ஒருவகைத் தந்திரமெனவே நான் கருதுகின்றேன்.

இலங்கையின் தமிழர்கள் அனைவரும் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இருந்து வந்தவர்களே.

மட்டக்களப்பில் சண்டி மன்னனுக்கு இராஜதானியிருந்தது மட்டக்களப்பு வாவிக்கு மேற்குக் கரையே அந்த இராஜதானியாகும்.

மட்டக்களப்பில் இருந்த வன்னியரில் வேளாள வன்னியர், முக்குவவன்னியர் என்ற இரண்டு பிரிவுகள் இருந்தனர். வேளாளவன்னியர் பிரிவில் திரு. இராஜமாணிக்கமும், முக்குவ வன்னியர் பிரிவில் திரு.



பேராசிரியர்சந்திரசேகர்

எதிர்மன்னசிங்கமும் முக்கியமானவர்களாகும்.

சண்டி மன்னனால் அறிமுகப்படுத்தப்பட்ட இப்பிரிவுகளை பிரித்தாளும் சுகத்திற்காக ஆங்கிலேயரும் தொடர்ந்து வைத்திருந்தனர்.

கிழக்கிலங்கையில், சாதியும் 'பெண்வழி முதுசமும்', தாய்வழியாகவே கணிக்கப்பட்டு வருகின்றன. இது கேரளத்தில் உள்ளமுறை மட்டுமன்றி—பாண்டியர்களது முறையாகவுமிருந்தது.

மொழிவழக்கு இடத்துக்கிடம் கூட வேறுபடுகின்றது. திருகோணமலையில் பேசப்படும் மொழி மட்டக்களப்பில் பேசப்படுவதில்லை. வட இலங்கைப் பிரதேசங்களிலும் இடத்துக்கிடம் வேறுபாடான மொழி வழக்குண்டு. இவ்வேறுபாடுகள் மொழியை வளப்படுத்துகின்றனவே தவிர மொழியால் பிரதேசத்தை வேறுபடுத்தவில்லை.

மட்டக்களப்பில் 'கத்தரிக்காய்' என்றும் —'வழுதுணங்காய்' என்றும் வழக்கத்திலுள்ள பெயரில்— 'வழுதுணங்காய்' சங்க இலக்கியத்தில் வரும் பெயரே தவிர மட்டக்களப்பில் மட்டும் பேசப்படும் மொழியல்ல.

கிழக்கு மாகாணம் முழுக்க சிங்கள மன்னர்களின் கீழ் இருக்கவில்லை. யாழ்ப்பாண மன்னர்களின் ஆதிக்கம் திருகோணமலையில் வெருகல் வரைக்கும், பாண்டியரின் ஆதிக்கம் திருக்கோவில்வரையும், சோழமன்னர்களின் ஆதிக்கம் தம்பிலுவில் வரைக்கும் பரவியிருந்தது.

கிழக்கில் கண்ணகை வழிபாடு சோழரால் அறிமுகப்படுத்தப்பட்டு வழக்கத்தில் உள்ளமை சிறந்த ஒரு சான்றாகும்.

வடக்குக்கும், கிழக்கிற்கும் இருக்கும் தொடர்பினையும் தாயக இணைப்பு இலட்சியத்தினையும் பண்பற்ற — சுயநலமான— வரலாற்றுத் திரிபான கருத்துக்கள் எவ்வாறும் தடுத்து விட முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி — போராளி இயக்கங்கள் என்பவற்றைப் பொறுத்த தொடர்புகள் வடக்கிற்கும் — கிழக்கிற்கும் எவ்விதத்திலும் வித்தியாசமானதாகவில்லை.

கலாசாரப் பரிவர்த்தனை பிரிக்க முடியாததாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கும் 40 வீத யாழ்ப்பாணத்தவரற்ற மாணவர்களில் கிழக்கு மாகாணத்தவரே அதிகம்.

இரண்டு மாகாணங்களையும் சமயரீதியில் திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் இணைந்து நிற்கின்றன.

தொன்று தொட்டு வந்த கலாசாரப் பரிவர்த்தனையை யாராலும் தடுத்துவிடமுடியாது.

கிழக்கு முஸ்லிம்கள் மொழியாலும் - கலாசாரத்தாலும் தமிழர்களுடன் இணைந்தவர்களே.

கோலாட்டம் வசந்தன் கூத்து என்பன இஸ்லாமியத் தமிழர்களால் இன்னும் பின்பற்றப்படும் கலாசார நிகழ்வுகளாக உள்ளன.

கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் இன்னும் முறை கூறி அழைப்பது அவர்களுக்கிடையில் உள்ள அன்னியோன்னியத் தொடர்பை வெளிப்படுத்துகின்றது.

90 வீதமான கிழக்கிலங்கையின் முஸ்லிம் தலைவர்கள் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் - திருமலை இந்துக்கல்லூரியிலும் - தமிழ்ச்சகோதரிகளுடன் இணைந்து கற்ற பழைய மாணவர்கள் என்பதனையும் — அவர்களுக்கிடையில் இன்றும் கல்வியூடான தொடர்பு வளர்ந்து வருவதையும் பிரிக்க முயல்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

1913 ஆம் ஆண்டில் கிழக்கிலங்கையில் அமைக்கப்பட்ட மேற்கத்தைய செமினறி பாடசாலைகளில் அரச உத்தியோகத்தர்கள் 'சைவம்' கற்பிக்க முயன்றபோது அதனை செமினறி தடுக்க வடக்கில் இருந்து சேர். பொன். இராமநாதன் கண்டித்துக் குரல் எழுப்பிய சம்பவம் கிழக்கிலங்கை மக்கள் மீது வடக்கு மக்களுக்கு இருந்த அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது.

அதே அக்கறை வழிவழியாக — பரம்பரையாக இன்றும் தொடருகின்றபோது—

பதவி மாயைக்குள் சிக்கிக் கொண்டு- உயர்ந்த இடத்தில் இருப்பவர்களால் அதைச் சீரணிக்கமுடியாமை மிகவும் வேதனைக்குரியதும்- கண்டிக்கவேண்டியதுமாகும்.

—இவ்வாறு பேராசிரியர் தெரிவித்தார்.

(உ-119)

---

### நவராத்திரி சிறப்பம்சம்

## எங்கும் நீ நிறைந்தாய்

யாதுமாகி நின்றாய் - காளி...!
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் — காளி...!
தெய்வ லீலை யன்றோ..?
பூத மைந்தும் ஆனாய் — காளி...!
பொறிகளைந்தும் ஆனாய்
போதமாகி நின்றாய் — காளி...!
பொறியை விஞ்சி நின்றாய்
இன்பமாகி விட்டாய் — காளி...!
என்னுளே புகுந்தாய்..!
பின்பு நின்னையல்லால் — காளி
பிறிது நானும் உண்டோ
அன்பளித்து விட்டாய் — காளி
ஆண்மை தந்து விட்டாய்:
துன்பம் நீக்கி விட்டாய் — காளி
தொல்லை போக்கி விட்டாய்.

—பாரதியார்

---

# ஊழலுக்கு எதிராகப் போரிடும் வி.பி.சிங்

இந்திய அரசியலில் முக்கிய பிரமுகராக விளங்குபவர் விஸ்வநாத் பிரதாப் சிங்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பராக இருந்தவர் இன்று நேர் எதிரியாக மாறிவிட்டார்.

நிதி, பாதுகாப்பு அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த திரு. வி. பி. சிங் இன்று பிரதமர் காந்திக்கு எதிராக அணிதிரட்டி வருகின்றார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 56 வயதான வி. பி. சிங் ஏசிய வீக் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: இந்தியா முழுவதும் நீங்கள் அண்மையில் மேற்கொண்ட பயணம் உங்களுடைய திட்டங்களுக்குச் செயலுருவம் கொடுத்துள்ளதா?

சிங்: ஆம். ஓர் அர்த்தத்தில் பார்த்தால் புதிய இந்தியாவைக் கண்டுபிடித்ததாக அமைந்து விட்டது.

முந்திய பயணத்தின் போது உள்ளூர்ப் பிரச்சினைகள் பற்றித்தான் எனக்கு முறையிடப்பட்டது.

இம்முறை அப்படி அல்ல. அரசின் நம்பகத்தன்மை நன்றாகக் குறைந்துவிட்டது. மக்கள் ஆத்திரமாக உள்ளனர். ஏதாவது செய்ய வேண்டும் என்று கோருகின்றனர்.

இருக்கும் பல அரசியல் கட்சிகளுடன் புதிதாக ஒரு கட்சியைச் சேர்க்க நான் விரும்பவில்லை.

சில அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்தால் நல்லதாக இருக்கும்.

ஜனதா, காங்கிரஸ் (எஸ்), லோக்தள் ஆகியன இந்திரா காங்கிரஸ் கட்சியைப் போன்றவையே.

கேள்வி: உங்களின் போராட்டம் தார்மீக ரீதியானது. அதன் சித்தாந்தம் என்ன?

சிங்: நேர்மை, ஊழல், நல்லொழுக்கம் பற்றி எல்லாம் நான் பேசவில்லை. என் பேச்சுக்களை ஆராய்ந்து பாருங்கள்.

நோயாளியைத் தூற்றுவதன் மூலம் டாக்டர் சிகிச்சை அளிக்க முடியாது.

தேர்தல் சீர்திருத்தங்கள், உள்கட்சி ஜனநாயகம், பரவலான முறையில் திட்டம் இடுவது — ஆகியவற்றைத் தான் நாம் கோருகின்றோம். கைத்தொழில் துறைக் [illegible] முறை விஸ்தரிக்கப்பட [illegible]

கேள்வி : மகாத்மா [illegible] இன்று இந்தியாவுக்குத் தேவைப்படுகின்றது உங்களால் அந்த இடத்தை நிரப்ப முடியும் என்று கருதுகின்றீர்களா?

சிங்: அப்படியான சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கக் கூடாது ஜனநாயகத்தின் அழகு, சாதாரண திறமையுள்ள மனிதர்கள் ஒன்று சேர்ந்து பெரிய காரியங்களைச் சாதிப்பதில்தான் தங்கியுள்ளது.

இது பெரிய நாடு; திறமைக்குப் பஞ்சமில்லை இந்திரா காங்கிரஸில் கூட அனுபவமுள்ளவர்கள் நிறையப்பேர் உள்ளனர்.

கேள்வி; மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முதலில் பிரதமர் ராஜீவ் காந்தியை ஆதரித்தது; இப்போது காங்கிரஸுக்குள் புரட்சி இடம்பெற வேண்டும் என்று கோருகின்றது. கம்யூனிஸ்ட் ஆதரவை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

சிங்: ஆம் அவர்களின் ஆதரவைச் சில பிரச்சினைகளில் ஏற்றுக்கொள்வேன்.

இந்திரா காங்கிரஸின் தலைமை மாறவேண்டும்; அல்லது இடைக்கால பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும்.

கேள்வி: உங்களுக்கும் பிரதமர் காந்திக்கும் இடையே உள்ள சமூக பொருளாதாரபின்னணி பொதுவானதொன்று என்று சிரேஷ்ட கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் சொல்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

சிங்: அது அவரின் ஆராய்ச்சி. பிரதமர் காந்திக்கும் எனக்கும் இடையே பெரிய வித்தியாசம் உண்டு.

எனது நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் ஊழல் அதிகாரிகள் கொள்ளை நடத்துகின்றார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் கணக்கில் காட்டப்பட்டது பதுக்கப்படும் பணத்தின் தொகை 4 ஆயிரம் கோடி ரூபா என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கேள்வி: கடந்த ஏப்ரலில் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தீர்கள். பகலி [illegible]

---



### பொய்யாமொழி

குறள்:
இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

பொருள்:
'நம் அரசன் கடுமையானவன்' என்று குடிகளால் கூறப்படும் கொடுஞ் சொல்லை உடைய வேந்தன், ஆயுள் குறைந்து விரைவில் கெடுவான்.

---

# மரண தண்டனைப் பிடியை தளர்த்துகிறது ஜேர்மன்

கிழக்கு ஜேர்மனி அமைக்கப்பட்ட 38 ஆவது ஆண்டுநிறைவு தினம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வருகின்றது.

அதையொட்டி 'கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்; மரண தண்டனை ரத்துச் செய்யப்படும்'— என்று கிழக்கு ஜேர்மன் அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை தனது செப்டெம்பர் செய்திக் கடிதத்தில் வெளியிட்ட ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்ட முப்பத்தெட்டாவது ஆண்டு நிறைவு தினம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வருகின்றது.

அதை யொட்டி மரண

**இருளும் ஒளியும்** — எஸ். ஜி

தண்டனையை ரத்துச் செய்யவும் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கவும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாஸி மற்றும் யுத்தக் கைதிகள் தவிர்ந்த ஏனைய கைதிகளே பொதுமன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்படுவர்.

உளவு பார்த்தவர்கள், [illegible] வர்கள் ஆகியோருக்கும் மன்னிப்பு அளிக்கப்பட மாட்டாது.

விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளில் மனசாட்சிக் கைதிகளும் உள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்டோர் மனசாட்சிக் கைதிகளாக வைக்கப்பட்டு உள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை நம்புகின்றது.

அரசியல் ரீதியில் கைதிகளைச் சிறை வைப்பது பற்றி கிழக்கு ஜேர்மனியில் இரகசியம் பேணப்பட்டு வருகின்றது.

இதனால் 'மனசாட்சிக் கைதிகள்' எத்தனை பேர் என்ற விவரங்களைப் பெறமுடியாது இருப்பதாகச் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கின்றது.

பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட கைதிகள் அடுத்தமாதம் பன்னிரண்டாம் திகதி முதல் விடுதலை செய்யப்படுவர்.

டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னர் விடுதலை செய்யப்பட்டு விடுவர்.

மரண தண்டனை ரத்து உடனடியாக அமுலுக்கு வந்து விட்டது

கொலை, இனக்கொலை, தேசத்துரோகம், உளவு, சதி ஆகிய குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு வந்தது.

'அவசரப் பாதுகாப்பு நிலைமையின் போது, ஆயுதப்படையை விட்டு சொல்லாமல் வெளியேறுதல், இராணுவ சேவையைத் தவிர்த்தல், உத்தரவுக்குப் பணிய மறுத்தல், இராணுவப் புரட்சி நடத்துதல் போன்ற குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு வந்தது

மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் கடந்த 20 ஆண்டுகளாக அது [illegible]

1974 இல் இருந்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக கிழக்கு ஜேர்மன் பத்திரிகைகள் செய்தி வெளியிடவில்லை.

'சிலருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அது பகிரங்கமாக்கப்படவில்லை' — இப்படி மேற்கு ஜேர்மன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஜேர்மனுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்ட கிழக்கு ஜேர்மன் அட்மிரல் வின்னிபிரட் பாமன் என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அது பின்னர் நிறைவேற்றப்பட்டது.

இது பற்றிய உண்மை நிலையை சர்வதேச மன்னிப்புச் சபையினால் உறுதிப்படுத்த முடியவில்லை.

மரணதண்டனை அண்மைக் காலமாக நிறைவேற்றப்படவில்லையென்று கிழக்கு ஜேர்மன் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் கடைசியாக எப்போது மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக அவர்கள் தெரிவிக்கவில்லை. (இ-எ)

### முள்ளங்கியின் பெருமை

சிறுநீரகக் கற்களைக் கரைக்க முள்ளங்கிச் சாறு நல்ல மருந்து என்கிறார் கோலாலம்பூரைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவ விற்பன்னரான டாக்டர் ராஜேந்திர குமரன். முள்ளங்கியைப் பொடிப்பொடியாக நறுக்கி நீரில் இட்டு அவிக்க வேண்டும்.

இந்த நீரில் ஒரு டம்ளர் காலையும், மாலையும் அருந்தினால் சிறுநீரகக் கற்களினால் ஏற்படும் [illegible]

---

# 13 வருடங்களாகியும்

## மணிப்புரிக்கு விடிவு இல்லை

மணிப்புரி குடியேற்றம் ஏற்பட்டு பதின்மூன்று வருடங்களாகி விட்டன. காணிச் சீர்திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டபோது அப்போது ஆட்சியில் இருந்த சிறீலங்கா அரசின் ஆட்சியில்தான் இக்குடியேற்றம் தாபிக்கப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரையும் இக்குடியேற்றத்தில் எதுவிதமான முன்னேற்றமான அபிவிருத்தித் திட்டமும் அமுல் நடத்தப்படவுமில்லை வளர்ச்சியடையவுமில்லை.

இக் குடியேற்றமானது ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணத் தொகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தால் ஓரளவாவது முன்னேற்றம் அடைந்து இருக்கும்.

ஆனால் இது நல்லூர்த் தொகுதியுடன் இணைக்கப்பட்டதால் நல்லூர்க் கிராமசபையே இக்குடியேற்றத்தின் குறைகளை நிவர்த்தி செய்திருக்க வேண்டும். ஆனால் செய்யப் படவில்லை.

செம்மையான வீதி இதுவரைக்கும் அமையப்பெறாததால் சுடுமணலுக்குள் சின்னஞ்சிறு குழந்தைகள் படும் வேதனையை நித்தமும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆரம்பகாலத்தில் போடப்பட்ட மக்கி மண்ணைப் போட்டு ஏனையவீதிகள் திருத்தப்படத்தவறியதால் அவ்விடங்களில் வசிக்கும் மக்கள்படும் இன்னல்கள் அநேகம்.

சாதாரணமாக கடிதத்தொடர்புகளைத் தானும் மக்கள் பெற முடியாதுள்ளது அஞ்சல் பகுதி இக்கிராமத்துக்கென ஓர் ஊழியரை தனியாக கடமைக்கு

**குறையும் நிறைவும்**

அமர்த்தவில்லை.

ஏனைய இடங்களை முடித்து விட்டு வரும் தபால் ஊழியர்வெயில் கொடுமையினாலும் வீதிகள் இல்லாதபடியினாலும் வழியில் தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் கடிதங்களைத் கொடுத்து விட்டுப்போகிறார். அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதங்களை வழங்கமுடியாமல் திரும்பி விடுகிறார். கொழும்புத்துறை சந்தியில் இருந்து மின்சார வசதியை ஏற்படுத்தக்கூடிய வசதிகள் இருந்தும் இதுவரை காலமும் எவரும் ஏற்படுத்த முயலவில்லை.

இக்குடியேற்றத் திட்டத்தில் ஏறக்குறைய நானூறு குடும்பங்கள் உள்ளன. இதுவரைகாலமும் பல நோக்கு கூட்டுறவுக் கிளையொன்று நிறுவப்படாதது பெருங் குறையாக இருந்து வருகிறது. கூட்டுறவுக்கிளையானது குடியேற்றத் திட்டத்தின் நடு மையமான இடத்திலோ அல்லதுமுதலாம்குறுக்கு வீதியிலோ அமைதல் நன்று.

ஏனெனில் கூட்டுறவுக் கிளைக்கு வாகனத்தில் பொருட்களைக் கொண்டு வருவது மிகச் சுலபமாக இருக்கும்.

அத்தோடு உணவுமுத்திரைக்கான காலத்தில் மக்கள் தமது பொருட்களை கொள்வனவுசெய்த பிற்பாடு மிகுதிக்காலத்தில் கூட்டுறவுக் கிளையில் பொருட்களை விலை கொடுத்து வாங்கவும் வசதியாக இருக்கும்.

இக் கூட்டுறவுக் கிளையை தற்போது ஒரு சிலர் பொதுமக்களின் விருப்பத்தை அறிய முன்னர் குடியேற்றத்தின்பிற் பகுதியில் அமைத்திட முயற்சி செய்வதாகவும் கூறப்படுகிறது. இத் திட்டத்தைக் கைவிட்டு சகலருக்கும் பயன் தரக் கூடிய முறையில் கூட்டுறவுக்கிளையை அமைத்திடல் நன்று

**வ. தர்மதாஸன்**

இத்திட்டத்தில் சகல விடயங்களிலும் ஏட்டிக்குப் போட்டியாக நடவாமல் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது மிக அவசியம். இக் கூட்டுறவுக் கிளையை அமைக்கும் பொறுப்பு நல்லூர் ப. நோ. கூ. சங்கத்துக்கே உரியதானபடியால் அதன் தலைவர் பலருடைய அபிப்பிராயத்தையும் பெறுவது மிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புத் தோட்ட நிலங்களிலும் சிங்களக் குடியேற்றம்

## அளவை வேலைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், செப். 25
அம்பாறை மாவட்டத்தில் ஹிங்குராணை சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான கரும்புத் தோட்ட நிலத்தில் சிங்களக் குடியேற்றத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

குடியேறுபவர்களுக்குக் காணிகளை பகிர்ந்தளிப்பதற்குவசதியாக ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் அளவை செய்யப்பட்டு துண்டுகளாகக் குறிக்கப் பட்டிருக்கிறது.

இப்பகுதியில் குடியேற்றப்படும் சிங்களக் குடும்பங்களின் பொறுப்பில் இப்பகுதிக் கரும்புச் செய்கை விடப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–)

## யாழ் குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### யா.தே.கூ. சபைத்தலைவர் அறிக்கை

காங்கேசன்துறை, செப். 25
தற்போதைய சூழ்நிலையை நீடிக்கவிட்டால் யாழ் குடா நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். ஆகவே உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ள திலீபனின் நியாயபூர்வமானகோரிக்கைகளை இந்திய-இலங்கை அரசுகள் உடனடியாக ஏற்க வேண்டும்.

யாழ் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக யாழ். குடாநாட்டில் பல்வேறு அலுவல்கள் தடைப்பட்டுள்ளன.

இந்நிலையில் ப. நோ. கூ. சங்கங்களிலும் போதிய உணவுப் பொருள்கள் இருப்பில் இல்லை. இன்றைய நிலை நீடித்தால் யாழ். மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ள திலீபன் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை ஆகவே இலங்கை-இந்திய அரசுகள் அவற்றை உடனடியாக ஏற்று சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும் அல்லாவிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-68)

## மின்சாரம் கிடைக்குமா ?

கொடிகாமம், செப் 25
கொடிகாமம் பிரதான வீதி மற்றும் கச்சாய்வீதி பகுதித்துறை வீதிகள் இருளில் மூழ்கிக் கிடப்பதால் இவ் வீதிகளில் செல்வோர் பல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் புகார் கூறுகிறார்கள் (ஒ-75)

## ஆசிரியர் நலனுக்கு உழைத்துவரும் சங்கம்

### பொதுக்கூட்டத்தில் உரை

கிளிநொச்சி செப் 25
எமது தொழிற் சங்கம் இனம் சார்ந்த ஆசிரியர்களின் நலனுக்காக உழைத்து வருகிறது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் செயலாளர் திரு. த அருணகிரிராஜா மேற்கண்டவாறு கூறினார்

சங்கத்தின் தலைவர் திரு பொன் தில்லைநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

நிதிச் செயலர் திரு. நா. சோதிநாதன் பேசுகையில்:- கடந்த கால அசம்பாவிதங்களின் போது வேலை இழந்தவர்கள், காயமடைந்தவர்கள், ஊனமுற்றவர்கள், சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், சொந்தவீடு பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும்.

இனத்தின் விடுதலைக்காக பாடசாலைப் படிப்பையும் பல்கலைக்கழகப் படிப்பையும் இடைநிறுத்திய இளைஞர்கள் தொடர்ந்து தமது படிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பெண் உத்தியோகத்தர்களுக்கு மகப்பேற்று லீவை ஐந்து மாதமாக உயர்த்த வேண்டும் என்றார். (இ-76)

## மக்கள் முகம்

### மத்திய கல்லூரி அபி. சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செப் 25
யாழ் மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு பாலசுந்தரம் [அதிபர்] செயலாளர்: திரு. சி. இராசதுரை பொருளாளர்: திரு வி. ரீ கணேசலிங்கம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக 16 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். [ஒ]

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செப். 25
சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியின் அபிவிருத்திச்சபை வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் அபிவிருத்திச் சபையின் நிர்வாக உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. அருணாசலம் உபதலைவர்கள் ஆ. அருள்துரை ஏ. இராசநாயகம் செயலாளர் ஆ. பாலகிருஷ்ணன் உதவிச் செயலாளர்: மு. தம்பிஐயா பொருளாளர்: திரு நா. நித்தியராசா ஆகியோரும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ)

## திருகோணமலை

## தொலைத் தொடர்பு சேவையைச் சீரமைக்க 2 வருடங்கள் பிடிக்கும்

திருகோணமலை, செப். 25
திருகோணமலையில் சேதமுற்றிருக்கும் தொலைத்தொடர்புச் சேவைகளைச் சீராக்குவதற்கு குறைந்தது இரண்டு வருடங்கள் பிடிக்கும் திருமலை தொலைத் தொடர்பு நிலையக்களப் பொறியியலாளர் திரு. எஸ். கனகசூரியர் இதனைத்தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏற்பட்ட அழிவுகளின் பெறுமதி 28 கோடியாகும்.

தற்போது அவசர வேலைகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் 50 தொடக்கம் 60 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. என்றும் அவர் மேலும் கூறினார்.

கடந்த வாரம் ஜப்பானியக் குழுவொன்று திருமலை வந்து சேதமுற்றிருந்த தொலைத் தொடர்பு நிலையத்தைப்பார்வையிட்டுச்சென்றது. (உ-150)

## மேசன் தொழிலாளருக்கும் நஷ்டஈடு தேவை

யாழ்ப்பாணம், செப், 25
பாதிக்கப்பட்ட மேசன் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் பெற்றுத் தரவேண்டும்.

இவ்வாறு கோரும் அறிக்கை ஒன்றை ஏழாலை லெனின் சனசமூக நிலைய நிறைவேற்றுக்குழு விடுத்திருக்கிறது

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சமூக, அரசியல் பொருளாதார ரீதியில் பின் தள்ளப்பட்ட சமூகத்தினரில் 75 சதவீத மக்கள் மேசன் தொழிலையே ஜீவாதாரமாகக் கொண்டு வாழ்கிறார்கள்.

அது மட்டுமன்றி மேசன் தொழில் செய்பவர்களில் 95 சதவீதமான மக்கள் மேற்குறிப்பிட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

வர்த்தகர்கள், அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் போது, ஏழை மேசன் தொழிலாளர்களுக்கு ஏன் நஷ்டஈடு வழங்கக்கூடாது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது (ஒ)

## மேலதிக நீதிபதியாக நியமனம்

சாவகச்சேரி, செப். 25
சாவகச்சேரி நீதிவானுக்கக் கடமையாற்றும் நீதிபதி திரு. ந யோகசிகாமணி நீதிச்சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் யாழ் மாவட்ட மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. யோகசிகாமணி 1983 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இங்கு கடமையாற்றி வருகிறார் [ஒ-31]

## விவசாய அதிகாரி கொலை!

கொழும்பு, செப்25
வீடு திரும்பிக் கொண்டிருந்த விவசாய அதிகாரி ஒருவர் வழிமறிக்கப்பட்டு ஆயுதந் தரித்த கோஷ்டி ஒன்றினால் சுடப்பட்டு, வெட்டிக் கொல்லப்பட்டார்.

ஆனமடுவ என்னும் இடத்தில் கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது

இறந்தவரின் பெயர் சரத் விமலசேன.

தடை செய்யப்பட்ட ஜே வி பி. இயக்கத்தினரே இதனைச் செய்திருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (உ-எ)

## உடு புடைவைகள் அன்பளிப்பு

காங்கேசன்துறை, செப். 25
வீமன்காமம் குடியேற்றத் திட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள 69 குடும்பங்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினரால் உடு புடைவைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

600 ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் அடங்கிய பார்சல்கள் இந்த 69 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன. [ஒ-68]

விற்பனைக்கு வலம்புரிச்சங்கு
மிக நல்ல வலம்புரிச் சங்குகள் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு. முந்துங்கள். விலை 2500 ரூபாவில் இருந்து
T. உருத்திர கோமளேஸ்வரன்
பிள்ளையார் கோவில் வீதி, சொல்லங்கலட்டி, தெல்லிப்பளை
(1522)

## ஒப்பந்தம் மூலம்

## தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க முயற்சி

யாழ்ப்பாணம், செப் 25
தெற்காசியப் பிராந்தியத்தில் நியாயமான அடிப்படை உரிமைகளை முன்வைத்துப் போராடி வந்த மக்களை இந்தியா அடக்கி வந்துள்ளது அதே பாணியில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினால் தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் மழுங்கடிக்கமுனைந்து வருகிறது.

யாழ். பல்கலைக் கழக மாணவர் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் பின்னர் எங்கள் எல்லைப்புறக் கிராமங்களில் திட்டமிடப்பட்ட ரீதியில் விரைவாக சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

ஊர்காவல் படையிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்படவில்லை. அவற்றை களைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாகத் தமிழ்பேசும் மக்கள் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ முடியாத நிலை உருவாகி உள்ளது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறையில் உள்ள அரசியல் கைதிகளும் முற்றுகவிடுவிக்கப்படவில்லை புனருத்தாரணம் என்ற போர்வையில் சிறீலங்கா அரசு தன்னுடைய நிர்வாக அமைப்பைப் படிப்படியாக கொண்டு வருவது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

மேற்கூறப்பட்ட சம்பவங்கள் மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை எதையும் அளிக்கவில்லை என்பதை உணரக் கூடியதாக உள்ளது

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது (இ-ஈ)

ரெருசோ ஷிப்ஸ்
★ TERRAZZO CHIPS ★
IMPORTED
● கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)
● பித்தளை அலுமினியத் தகடுகள்
✶ வெள்ளைச் சிமெந்து
✶ தரை வெட்டும் மெசின் FLOOR CUTTING MACHINE
✶ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையா சகல பொருட்களும் கிடைக்கும்.
ரூ. 6/75 க்கு மேல்
☆ றம்சன்ஸ் ☆
443, பழைய சோனக தெரு, கொழும்பு - 12
தொலைபேசி:- 34411 - 31511

# மாநிலம் மாவட்டம் உள்ளூர்

## இளைஞர்களுக்குக் கூடுதலான புனர்வாழ்வு வசதி செய்க!

### அனைவரும் இந்நாட்டு மக்கள் என்கிறார் பிரதி அமைச்சர்

கிளிநொச்சி, செப். 25
அண்மைக்கால சிகைப்புகள் மூலம் இளம் சந்ததியினர் அரசியலில் புகுந்துள்ளனர். இவர்கள் அனைவரும் இந்த நாட்டு இளைஞர்களே.

ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தந்த இளைஞர் வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் திரு. காமினி அத்துக்கோரல கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் உரை நிகழ்த்திய போது மேற்கண்டவாறு கூறினார்

இளைஞர் சேவை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி பின்னர் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்காக தமிழ் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் 39 இளைஞர் யுவதிகளுக்கான நியமனம் வழங்கும் இவ் வைபவத்தில் இளைஞர் வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசியதாவது:-

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்ற பயிற்சிநிலையத்தை தென் இலங்கையில் உள்ள பயிற்சி நிலையம் போல் ஒரு முழுமையான பயிற்சிநிலையமாக மாற்ற ஆவன செய்வேன். ஆரம்ப நடவடிக்கையாக இரண்டு சில்லு, நான்கு சில்லு உழவு இயந்திரம் இயக்குதல், பழுதுபார்த்தல், விவசாயஉபகரணங்களைத் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

ஓர் இடத்தில் புனர்வாழ்வு அளிக்கப்படும் போது அந்த இடத்திலுள்ள இளைஞர்களுக்கு ஏற்றவாறு கூடுதலான புனர்வாழ்வு வசதி அளிக்கப்பட வேண்டும்

இப்படி அவர் கூறினார். வைபவத்தில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் இங்கு பயிற்சி பெற்று வெளியேறும் இளைஞர் யுவதிகளுக்கு நியமனக் கடிதங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார். (இ-76)

## முல்லைத்தீவின் வளங்கள் பற்றி ஆராய விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 25
'முல்லைத்தீவுமாவட்ட பொருளாதார வளங்களும் அபிவிருத்தியும்' பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை 26 ஆம் திகதியும் நாளை மறுதினம் 27 ஆம் திகதியும் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இரண்டு நாட்களும் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை நடைபெற இருக்கும் இக் கருத்தரங்கை ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

முல்லை மாவட்ட வளங்கள் பற்றிய முதல் நாள்கருத்தரங்குக்குமுள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு. இ. தங்கராசா தலைமை வகிப்பார்.

முல்லை மாவட்ட அபிவிருத்தி பற்றிய இரண்டாம்நாள்கருத்தரங்குக்குமுல்லைத்தீவுஅரச அதிபர் திரு. க பொன்னம்பலம். தலைமை வகிப்பார். கருத்தரங்கில் [illegible] ளார்.

## இயக்கங்கள் மோதல்களைத் தவிர்க்க வேண்டும்

### பல்கலை மாணவர் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், செப்.25
இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து எமது மக்களையும்பாரம்பரிய பிரதேசங்களையும் காப்பாற்ற வேண்டிய கடமைப்பாடு எம் அனைவருக்கும் உண்டு இயக்க முரண்பாடுகளையும் மோதல்களையும் தவிர்க்க வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் மத்திய குழு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று அநியாயமாக [illegible] போராளிகளையும் மரணத்தின் [illegible] யில் இருந்து காப்பாற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தேஆக வேண்டும். எமது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மாற்றான் உதவியை நாடுவதை விடுத்து தமக்குள் ஆயுதரீதியான மோதலைத் தவிர்த்து பேச்சுவார்த்தை போன்றஜனநாயக வழிகளை நாடுவதன் மூலம் இவற்றிற்கான தீர்வை முன்வைக்கவேண்டும்.

அப்படி செயல்பட்டால் எமது பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தை தெளிவான பாதையில் முன்னேற்ற முடியும்.

இப்படி அறிக்கையில் மேலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. (இ-ஈ)

## பிறந்ததின வாழ்த்து

செல்வன்:- தி. சுஜீந்தன்
25.09.1987



அராலி மேற்கைச் சேர்ந்தவர்களும் தற்போது மேற்குஜேர்மனியில் வசிப்பவர்களுமாகிய திருநாவுக்கரசு சாரதாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுஜீந்தன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, சதீஸ் மற்றும் அராலியைச் சேர்ந்த அம்மம்மா, ராணி அன்ரி, செல்வா அன்ரி, சாந்தி அன்ரி, சித்தப்பா, அண்ணா கோபி, கொழும்பைச் சேர்ந்த குட்டிமாமா, சரோ பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், அண்ணாமார், கனடாவைச்சேர்ந்த ராசன்மாமா, சிறி அன்ரி, சித்தப்பா, வேலணையைச் சேர்ந்த இராசரத்தினம்மாமா, மச்சான், மச்சான்மார், ஓட்டுமடத்தைச் சேர்ந்த பெரியம்மா, அண்ணா, அக்காமார், அராலியைச் சேர்ந்த தருமராஜா, பெரியமாமா, மற்றும் பாட்டன், பாட்டிமார், சித்தா, சித்திமார், மாமன், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் சகல கலைகளும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர். (1521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தொடர்ந்தாற்போல் தியானம் செய்தால் மனம் உறுதி பெற்று விடும்; அப்போது அதை விட்டு விட வேண்டும் என்றே உங்களுக்குத் தோன்றுது.

—அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 21805, 22072

25. 9. 1987 த. பெ. இல:- 23


## பொறிக்குள் அகப்படாதீர்!

இந்திய ரிசேர்வ் பொலீஸ் படையைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவிக்சப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் நாலாயிரம் இந்திய ரிசேர்வ் பொலீஸாரை தமிழ்ப் பிரதேசமான வடக்கு, கிழக்கில் கடமைக்கு அமர்த்த இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

வடக்கு - கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட விரும்பும் ஸ்ரீலங்கா அரசுக்கு உதவும் பொருட்டு, அதன் அங்கிகாரத்துடனேயே இந்திய ரிசேர்வ் பொலீஸார் இங்கு வருவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், திரு. ராஜீவ் காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் சரி வர அமுல் செய்வதை உத்தரவாதப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும், வடக்கு கிழக்கில் அமைதியை நிலைநாட்டவும் என்று ஏற்கனவே எட்டாயிரம் இந்திய இராணுவத்தினர் தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டுள்ளவர்.

அவர்கள் போதாது எனக்கருதியே மேலதிகமாக ரிசேர்வ் பொலீஸாரும் வருவிக்கப்படுகின்றனர். இந்திய அரசைப் பொறுத்தவரையில் இராணுவத்தினர் அமைதியை நிலைநாட்டுவதற்காக உள்ளனர். ரிசேர்வ் பொலீஸார் தமிழ்ப் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக வருவிக்கப்படுகின்றனர். அது மட்டுமல்ல — தமிழ்ப் போராளிகள் குழுக்களின் மோதல்களைத் தடுப்பதற்காகவுமே ரிசேர்வ் பொலீஸாரை இங்கு வருவிக்க முடிவு செய்யப்பட்டதாம்.

அப்படியானால், போராளிக் குழுக்கள் மோதிக் கொள்வதை இந்திய இராணுவத்தால் தடுக்க முடியாது என்பதா? இராணுவத்தினரால் தடுக்க முடியாது என்றால் ரிசேர்வ் பொலீஸார் எவ்வாறு தடுக்கப் போகிறார்கள்? பொலீஸார் என்பதால் பொது மக்களுடன் நெருங்கிப் பழகி, துப்புப் பிடித்து, மோதும் போராளிகளை மடக்கி விடுவார்களோ?

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு மாதங்கள் முடியப்போகின்றன. அதனைச் செயலாக்கும் விதத்தில் நாடாளுமன்றத்தில் இன்னும் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை. வடக்கு - கிழக்குக்கு இடைக்கால அரசுதானும் நிறுவப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் அமைதியை நிலைநாட்டவென்றுதான் இந்திய அமைதிப்படை இங்கு வந்தது. ஆனால் அதுவும் நிலைகொண்டிருக்கும் போது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்குப் பொலீஸ் நிலையங்கள் அவசியம் எனக் கூறி ஸ்ரீலங்கா அரசின் பொலீஸ் நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒப்பந்த அமுலுக்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசு ஆதிக்கத்தைச் செலுத்த எடுத்த முயற்சி அது என்று தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொலீஸ் நிலையங்களைத் தாக்கினர் அதனால் தமிழ்ப் பகுதிகளில் அதிக அளவில் ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையங்களை நிறுவும் முயற்சி தோல்வி கண்டது. அதைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் உதவியுடன் பொலீஸ் நிலையங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் திடீரெனக் கைவிடப்பட்டு இந்திய ரிசேர்வ் பொலீஸார் வருவிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுமொத்தமாகப் பார்த்தால், வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா நிர்வாகத்துக்குப் பதில் இந்திய நிர்வாகம் அல்லது ஆதிக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகத் தோன்றுகிறது.

நிலைமை நூற்றுக்கு நூறு சீராகும்வரை தமிழ்ப்பகுதிகளை இந்தியாவுக்கு குத்தகைக்கு கொடுக்க ஜே. ஆர். நினைத்திருக்கிறாரோ என்னவோ!

தமிழ்ப் பகுதிகளில் மறைமுகமாக இந்திய நிர்வாகத்துக்கும், ஆதிக்கத்துக்கும் வழி சமைத்து தமிழர்களை இந்தியாவுடன் முட்டி மோதத் தூண்டும் தந்திரமாகவும் இந்த நடவடிக்கைகள் இருக்கலாம்.

தமிழர்களின் நலன்களைக் காக்கவென்று கங்கணம் கட்டிய இந்தியாவை அவர்களின் எதிரியாக்கிவிட அவர் திட்டமிடலாம்.

அவரது பொறிக்குள் அகப்படாமல் இருக்கும் விதத்தில் இந்தியாவும் குறிப்பாகத் தமிழ்நாடும், ஈழத்தமிழர்களும் குறிப்பாகத் தமிழ்ப் போராளிகளும் செயற்படுவது அவசியம்.

## குடியேற்றம் இல்லையாம்

புதிய குடியேற்றத்திட்டங்கள் எதுவும் உருவாக்கப்படமாட்டாது.

இலங்கை அரசு இப்படி உறுதி அளித்திருப்பதாக இந்திய வானொலி தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

குடியேற்றத் திட்டங்கள் பற்றி இந்திய அரசு, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் தொடர்பு கொண்டது.

அப்போதுஇந்த உறுதிமொழி அளிக்கப்பட்டதாக இந்திய வானொலி தனது செய்தி அறிக்கையில் மேலும் தெரிவித்தது. (இ-எ)

# மகளின் குழந்தைகளை தானே பிரசவிக்கும் தாய்!

## ஜோஹன்னஸ்பேர்க்கில் அபூர்வ நிகழ்ச்சி

ஜோஹன்னர்ஸ்பேக், செப். 24

மகளுக்காகத் தாய் குழந்தை பெற இருக்கின்றாள்.

அதுவும் ஒரு குழந்தையை அல்ல; ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பெற இருக்கின்றாள்.

நிறைமாதக் கர்ப்பிணியாக ஜோஹன்னஸ்டர்க் ஆஸ்பத்திரியில் பிரசவ நாளை எதிர்பார்த்துக் காத்து இருக்கும் தாயின் பெயர் பட் அன்டனி, வயது 48.

மகளின் பெயர் கரேன் பெரா ஜோர்ஜ். அவருக்கு ஏற்கனவே குழந்தை ஒன்று இருக்கிறது.

அதன் பின்னர் மகள் கரேனுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

குழந்தை வேண்டும் என்று மகள் அவதிப்பட்டாள்.

தாய் 'நான் இருக்கின்றேன்'-என்று முன்வந்தாள்.

மகளுக்காகத் தாய் குழந்தையை எப்படிப் பெறமுடியும்?

மகளின் கருப்பையில் இருந்து முட்டை ஒன்றை எடுத்து தாயின் கருப்பைக்குள் வைத்தார்கள்.

பின்னர் என்ன நடந்தது?-இவ் விவரங்களைத் தெரிவிக்க அவளின் குடும்ப அங்கத்தவர்கள் மறுத்துவிட்டனர்.

பிரிட்டிஸ் பத்திரிகை ஒன்று 'தாய் மகளுக்கு ஆக குழந்தையைப் பெறும் கதை'யைப் பிரசுரிக்கும் உரிமையை அதிக பணம் கொடுத்து வாங்கி விட்டது

மகளின் 'குழந்தைகளை'த் தாய் பெற்றெடுத்தாலும், சட்டப்படி குழந்தைகளின் தாய் என்ற உரிமை மகளுக்குப் போய்ச் சேராது.

சுருங்சச் சொல்லின், பாட்டி தான் குழந்தைகளின் சட்டபூர்வமான தாய்.

ஆனால் பாட்டி பட் அன்டனி, பெறப்போகும் மூன்று குழந்தைகளையும் மகள்—மருமகனிடம் ஒப்படைக்க இருக்கின்றாள்.

இத்தகவல்களை தென் ஆபிரிக்க நீதியமைச்சர் கோபி கொயட்ஸீ வெளியிட்டார். (உ-எ)

### கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றம்

காபூல், செப். 24

ஆப்கன் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பத்து உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதற்கான உத்தரவை ஆப்கன் தலைவர் நஜி புல்லா பிறப்பித்தார்.

கட்சிக்கு விரோதமாக நடந்து கொண்டதற்காக இவர்கள் வெளியேற்றப்பட்டதாக காபூல் வானொலி அறிவித்தது. (இ-எ)

ஈரான் மீது பொருளாதாரத்தடை:

# ஐ. நாவின் முடிவுக்கு ரஷ்யா ஒத்துழைக்குமா?

நியூயோர்க், செப். 24

ஈரான்மீது ஆயுதத்தடை விதிக்கும் ஐ. நா. வின் தீர்மானத்துக்கு சோவியத்யூனியன் ஆதரவளிக்காமல் விடலாம் என்ற சந்தேகம் ஐ. நா. வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளது.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கடந்தபுதன் கிழமை சோவியத் வெளிநாட்டமைச்சர் எட்வர்ட் ஷெர்வான்ட்யே உரை நிகழ்த்தினார்.

அந்த உரையின் பின்னரே இச்சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அப்போது சோவியத் அமைச்சர் சொன்னதாவது:

வளைகுடா போர் தொடங்கியதற்கான காரணம், யார் தொடக்கியது போன்றவை குறித்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் விசாரணை நடத்திக் கண்டுபிடிக்க வேண்டும்.

வளைகுடாவில் சுதந்திரக் கப்பற் போக்கு வரத்து நடைபெறுவதற்கான வழிவகைகளை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் செய்து கொடுக்கவேண்டும்.

வளைகுடாவில் இருந்து சகல நாடுகளின் யுத்தக் கப்பல்களும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

ஐ. நாவின் கட்டுப்பாட்டின் கீழான கடற்படை ஒன்று வளைகுடாவில் சுதந்திரக் கப்பல் நடமாட்டத்தை உறுதிப் படுத்தவேண்டும்.

— இப்படி சோவியத் அமைச்சர் தெரிவித்தார்.

இப்பேச்சில் ஈரான் மீது ஆயுதத்தடை விதிப்பது குறித்து சோவியத் யூனியன் கருத்து எதையும் வெளியிடவில்லை.

இதனிடையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ், சோவியத் அமைச்சரை அவசரமாக நேற்றுச் சந்திக்க இருந்தார்.

அதேநேரத்தில் லண்டனில் உள்ள ஈரான் ஆயுதக் கொள்வனவு நிலையத்தை மூடிவிடும்படி ஈரானை, பிரிட்டன் உத்தரவிட்டுள்ளது. (உ-எ)

### மலாவியில் போத்தா

ஜோஹன்னஸ்பர்க், செப். 24

தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் போத்தா கறுப்பு இனநாடான மலாவிக்குச் சென்றார்.

இருதரப்பு உறவுகள், தென்ஆபிரிக்க அரசியல் நிலைமை ஆகியன குறித்து இருநாட்டு அமைச்சர்களும் பேச்சுக்கள் நடத்துவர் என்று அறிவிக்சப்படுகின்றது. (உ-எ)

### நிதி பெறுவதில் றேகனுக்குக் கஷ்டம்!

வாஷிங்டன், செப் 23

நட்சத்திரப் போர்த் திட்டத்துக்குத் தேவையான நிதி உதவியைப் பெறுவதில் அமெரிக்க அதிபர் றேகனுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டு உள்ளன.

நட்சத்திரப் போர்த் திட்டத்தைச் செயல்படுத்த றேகன் நிர்வாகம் போட்டிருந்த ஆரம்ப மதிப்பீடு 800 கோடி டாலராகும்.

அமெரிக்க நாடாளுமன்றம் இதனை 310 கோடியாக வெட்டிய பின்னர், திட்டத்துக்கு அனுமதி வழங்கியது.

இப்போது இந்த உதவித்திட்டம் செனட்டிற்கு வந்துள்ளது.

செனட்டின் ஜனநாயகக்கட்சி செனட்டர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

அதிபர் றேகனின் குடியரசுக்கட்சிச் செனட்டர்கள்எண்ணிக்கை செனட்டில் 50.

ஜனநாயகக் கட்சிக்கு 51 செனட்டர்கள் உள்ளனர். (இ-எ)

### வெளி உலகில்

## 70 கிளர்ச்சியாளர்கள் பிலிப்பீன்ஸில்கொலை!

மணிலா, செப். 24

ஆறுநாள் சண்டையில் 70 கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படி பிலிப்பீன்ஸ் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 17ஆம் திகதியில் இருந்து இம் மோதல்கள் இடம் பெற்றன.

கொல்லப்பட்ட கிளர்ச்சிக் காரர்கள் புதிய மக்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்சப்பட்டது (உ-எ)

### இவர்களைத் தண்டிக்கச் சட்டம்

இஸ்லாமபாத், செப். 24

இஸ்லாமிய நெறிகளுக்கு முரணான வகையில் புனித திருக்குர் ஆனை மொழிபெயர்க்கும் அல்லது திருக்குர் ஆனுக்கு விளக்கம் கொடுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களைத் தண்டிக்கும் சட்டம் ஒன்றைப் பாகிஸ்தான் நாடாளுமன்றம் நிறைவேற்றி உள்ளது.

அந்த மொழி பெயர்ப்புக்கள், விளக்கங்களை அச்சிட்டு வெளியிடுபவரும் இச்சட்டத்தின்படி தண்டிக்கப்படுவர்.

## பிஜித்தீவில் காபந்து அரசாங்கம்

### சகல கட்சிகளும் பங்குகொள்ளும்

சுவா, செப். 24

பிஜியில் சகல அரசியல் கட்சிகளும் பங்குபற்றும் காபந்து அரசு ஒன்றை அமைப்பதில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் டாக்டர் பவித்ரா தலைமையிலான இந்திய சார்பு அரசைப் பதவி கவிழ்த்த இராணுவத் தளபதி கேர்ணல் சித்தி வேணி ரபுக்கா, காபந்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதி யளித்திருக்கின்றார்

இந்த அரசில் முன்னாள் பிரதமர் மாரு தலைமையிலான அலயன்ஸ் கட்சியும் டாக்டர் பவித்ரா தலைமையிலான தேசியக் கட்சியும் அங்கம் வகிக்கும். (உ-எ)

## துப்பாக்கிப் பாவனை: கட்டுப்படுத்த பிரிட்டனில் சட்டம்

லண்டன், செப் 24

துப்பாக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று பிரிட்டனில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோதமாகத் துப்பாக்கிகளை வைத்திருப்போருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு நபர் 16பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டுப் பின்னர் தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்திருந்தார் அல்லவா! அச்சம்பவத்தைத் தொடர்ந்து துப்பாக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தும்படி பொதுமக்கள் அரசை வற்புறுத்தி வந்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு புதிய கட்டுப்பாடுகளை அமுலுக்குக் கொண்டுவந்து உள்ளது.

அவையாவன;

★ தானாகத் தோட்டாக்களை நிரப்பும் ரைபிள் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

★ தானியங்கித் துப்பாக்கிகளில் ஒரு ரகத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

★ பாவிக்கப்படாத நேரத்தில் 'ஷொட்கன்' துப்பாக்கிகளைப் பூட்டி வைத்திருக்கவேண்டும்.

★ சட்டவிரோதமாகத் துப்பாக்கிகள் வைத்திருப்போருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுவது கடந்த 20 ஆண்டுகளில் இதுவே முதல் தடவை. (இ-எ)

# தன்மானத்தையும் கௌரவத்தையும் அடகு வைப்பதற்கு நாம் தயாரில்லை

## வல்லைக் கூட்டத்தில் புலிகள் பிரமுகர் யோகி விளக்கம்

வடமராட்சி, செப். 25

நாம் தமிழ் மக்களின் தன்மானத்தையும், சுய கௌரவத்தையும் இந்தியாவிற்கோ அல்லது இலங்கைக்கோ அடகு வைக்கவோ, விற்கவோ நாம் தயாராக இல்லை. அதற்கு நாம் இணங்காததால்தான் விடுதலைப் புலிகளை மட்டும் இந்திய அரசு வெறுத்து, எதிர்க்கவும் ஊதாரி அமைப்புகளுக்கு ஆதரவளித்து, எமது இயக்கத்தை ஒழிக்கவும் முற்படுகின்றது.

இவ்வாறு புலிகள் பிரமுகர் திரு யோகி நேற்று முன்தினம் வல்லையில், தொடர்ந்து எட்டு நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் உண்ணாவிரதிகள் முன் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. யோகி மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வடமராட்சியில் நடைபெற்ற 'ஒபரேஷன் லிபரேஷன்' ஆகியவை குறித்து அவை நடைபெறுவதற்கு முன்பே இந்திய அரசுக்குத் தெரிந்திருந்தது.

அதனைக் காரணம் காட்டி இந்திய அரசு [illegible] அமைத்தது.

இலங்கை அரசு [illegible] தாக்குதல் ஒன்றை யாழ்குடா எங்கும் நடத்தவுள்ளது. இதனால் பத்தாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழப்பார்கள். ஆகவே நீங்கள் இலங்கை அரசின் குறைந்தபட்சக் கோரிக்கையினை ஏற்றுப் போனால் உங்களையும், உங்கள் மக்களையும் உயிர் இழப்புகளிலிருந்து காப்பாற்றலாம் —என்றும் கூறியது.

எமது மக்களின் சுதந்திர விடுதலைக்காகவே நாம் போராடுகின்றோம். அவர்களுக்கு நிரந்தர விமோசனம் தராத எந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

அப்படி ஒருநிலை யாழ்குடாநாட்டிற்கோ அல்லது தமிழர்கள் வாழும் ஏனைய இடங்களுக்கு நேருமானால் இலங்கை இராணுவத்துடன் புலிகள் போரிட்டு, மக்களோடு மக்களாக மடிவார்களே தவிர, புலிகள் அதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். —இப்படி நாம் அன்றே திட்டவட்டமாக இந்திய அரசிடம் கூறிவிட்டோம்.

இன்று ஒற்றுமையாக ஓர் இயக்கத்தின்கீழ் எம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஒற்றுமையைக் குலைக்க இந்திய அரசு உடைந்துபோன ஊதாரிக் கட்சிகளின் கையில் ஆயுதங்களைக் கொடுத்து மக்களையும் எமது இயக்கத்தையும் ஒழிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றது.

ஆசியப் பிராந்தியத்தில் தனது பாதுகாப்புக்குச் சிலதேவைகள் இந்தியாவுக்கு இருந்தன.

ஆசியாவின் மையநிலையம் ஸ்ரீலங்கா. அந்த நிலையத்தை அவர்கள் கைப்பற்றியதன் மூலம் இந்தியாவிற்குப் பாதுகாப்புப் பூரணமாகக் கிடைத்துவிட்டது. ஆனால் எமது பாதுகாப்பு வெறும் பேச்சோடு பேச்சாக அடிபட்டுப்போகிறது.

ஆகவேதான் தமிழர்களாகிய நாம் உயிரைக் கொடுத்தும் எமது மண்ணை மீட்டோம்என்ற இலட்சியத்துடன் எமது போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (ஒ-160)

### ஊழலுக்கு - - -

(3ம் பக்கத்தொடர்ச்சி)

க்க மாட்டேன் என்று சொன்னீர்கள். அது திட்டவட்டமான கூற்றுத்தானே!

சிங்: நான் அரசியலில் இருந்து விலகுவேன் என்று கூறவில்லை.

ஒருவர் அமைச்சராக இருந்து கொண்டும் இயங்கலாம்; கட்சிக்குள் இருந்து கொண்டும் இயங்கலாம்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கியும் செயல்பட முடியும்.

### 13 வருடங்க - - -

[3ம் பக்கத் தொடர்ச்சி]

முக்கியம்.

இப்பகுதியில் பன்றிகள் செய்யும் அட்டகாசம் சொல்லுந்தர மன்று சம்பந்தப் பட்டவர்களிடம் எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் எதுவித நடவடிக்கையும் எடுக்க முற்படவில்லை. சுகாதாரப்பகுதியினரோ அல்லது பொதுமக்களின் நலனில் அக்கறை உள்ள அமைப்புக்களோ தீவிர நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும்.

[illegible] யாக இக் குறைபாடுகள் [illegible] த்தில் நடவடிக்கை மேற்கொள்வதால்மணிப்புரிக் கிராமம் மட்டுமல்ல அதன் அயல்க் கிராமங்களான உதயபுரம், வசந்தபுரம், நாவலடி போன்ற பகுதிகளும் கூடிய நன்மைகள் பெற்றிடும் என்பதை தெரிவித்து இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறார்கள் பொதுமக்கள்.

### சமய சந்நிதிகளில்

### செபமாலை மாதா திருவிழா

யாழ்ப்பாணம், செப் 25

கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை மாதா வருடாந்த திருநாள் நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் 3 ஆம்திகதி நற்கருணை விழாவும், நற்கருணை நாதனின் தேர்ப்பவனியும்—

4 ஆம் திகதி திருவிழாப் பூசைகள் இடம் பெறுவதோடு மாலை 5 மணிக்கு செபமாலை அன்னையின் தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் நடைபெறும். (ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்

25 - 09 - 1987 வெள்ளிக்கிழமை




துப்பாக்கியில் பாக். முத்திரையா?

## அந்த ஆயுதங்களை இந்தியாதான் தந்தது!

### புலிகள் பிரமுகர் சொல்கிறார்

அச்சுவேலி, செப். 25

அன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியா வழங்கிய உதவிகளும் ஒத்துழைப்புக்களும் இன்று எதிராகப் பயன்படுத்தப்பட்டு உலக அரங்கில் புலிகளின் மதிப்பைக் குறைக்கும் விதத்தில் பிரசாரம் செய்யப்படுகின்றது.

எங்களிடம் இருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களில் பாகிஸ்தான் முத்திரை காணப்படுவதாக இருந்தால் அவை இந்தியாவால் எமக்கு வழங்கப்பட்டதே அன்றி நாங்கள் பாகிஸ்தானிடம் இருந்து பெற்றுக்கொண்டவை அல்ல.

— இவ்வாறு கூறினார், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரமுகர் திரு. யோகி.

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள இராசவீதிச் சந்தியில் புதன்கிழமை நடைபெற்ற அடையாள உண்ணாவிரதத்தின் முடிவில் சலந்துகொண்டு அவர் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

இன்று இந்தியா எம்மை முற்றாகப் புறக்கணித்து உலக அரங்கில் எமக்கு எதிராக விஷமப் பிரசாரம் செய்கின்றது. இதன் மூலம் தமிழீழ மக்களையும், தமிழக மக்களையும் திசைதிருப்பப் பார்க்கின்றது.

நாங்கள் பாகிஸ்தானுடனோ அல்லது வேறு நாடுகளுடனோ கூட்டு வைத்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படவில்லை.

எமது இயக்கம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட போதிலும் தமிழீழத்தை மீட்டெடுப்பதற்கு ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கும்.

கூட்டத்தில் திரு. காசி ஆனந்தன் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தலைவர் பிரபாகரன் வழிநடத்தத் தொடங்கிய காலத்திலிருந்தே கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் அவருடன் இணைந்து நான் செயற்பட்டேன்.

அக் காலத்தில் பிரபாகரனின் அங்கீகாரத்துடனே கூட்டணியில் பங்கு கொண்டு செயற்பட்டேன்.

ஆனால் தமிழீழ இலட்சியத்திலிருந்து படிப்படியாக கூட்டணி விலகுவதனையும், அதன் மிதவாதப் போக்கும் என்னை புலிகளின் முழுநேர ஊழியனாக்கியது. — இப்படி அவர் கூறினார். (உ-11)

உங்களுக்குத் தேவையான

சகலவிதமான

- ஸ்டேசனரி உபகரணங்கள்
- உள்ளூர் வெளியூர் அச்சடிப்பு கடதாசி வகைகள்
- போட்டோ ஸ்ரட் பிரதிபண்ணும் கடதாசிகள் (எல்லா அளவுகளிலும்)
- அழகிய டிசைன்களில் திருமண கார்ட்டுகள்—வேறு வைபவங்களுக்குரிய கார்ட்டுகள்
- கேக் சுற்றும் மேலுறைகள் (வர்ணநிறங்களில்) கேக் பெட்டிகள்
- டெலக்ஸ் பேப்பர் ரோல்
- கணக்குப் புத்தகங்கள் - பேரேடு நாட் குறிப்புகள் இன்னும் பல.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

இன்றே விஜயம் செய்யுங்கள்
V. P. P. ஆர்டர்கள் ஏற்று துரித கதியில் அனுப்பிவைக்கப்படும்

A. V. S.
என்டர்பிரைசெஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
78, மலிபன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி: 24821

யா/ மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை

6 ஆம் ஆண்டு வகுப்பிற்கான
பிரவேசப்பரீட்சை 1988

தமிழ், கணிதம், ஆகிய பாடங்களில் மேற்படி பரீட்சை 07-09-87 இல் நடைபெறும். தற்போது ஆண்டு 5 இல் கற்பவரும் 01-02-77 க்குப் பின் பிறந்தவருமான மாணவர் விண்ணப்பிக்கலாம்.

13''X8'' அளவுடைய கடதாசியில் பெயர், பிறந்த திகதி, பாடசாலை, விலாசம் ஆகியவற்றுடன் 20-10-87 க்குமுன் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 10 உம் சுய விலாசமிடப்பட்ட நீள் கடித உறை இரண்டும் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

திருமதி லீலா சந்திரசேகரம்
அதிபர்
யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை,
பருத்தித்துறை.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 25-09-1987.

Printed and Published by New Uthayan Publications Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on September 25, 1987

## இன்று ஊர்வலம்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தும், திலீபனின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆதரித்தும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் இன்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துகிறது. காலை 9 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்றலில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும்.

அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் இம் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குகொண்டு மாணவர்களுடைய சக்தியை வெளியுலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

ஆய்வு நிறுவனம் முன்னியவனை வித்தியானந்தாக் கல்லூரியில் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் நடத்த இருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கருத்தரங்கிற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்) (ஒ)

## உண்ணா விரதம்

யாழ்ப்பாணம், செப். 25

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் திருச்செல்வம் நேற்று 2 ஆவது நாளாக தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

சுமார் 4,000 க்கும் அதிகமான மக்கள் இவருக்கு ஆதரவாக ஒரு நாள் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தனர். (ஒ)

## குருநகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலைய முன்றலில் இந்த உண்ணாவிரத நிகழ்ச்சி நடைபெறும்.

பெரியதம்பி சுந்தர் (வயது 17), மனவல் ஜீவா (வயது 15), அந்தோனிப்பிள்ளை டெல்மன் (வயது 16), கொன்ஸன்ரைன் கொண்ஸ்ஸ் (வயது 17) குட்டி மனவல் ஞானசீலன் (வயது 17) ஆகியோரே உண்ணாவிரதத்தில் ஈடுபடவிருக்கின்றனர். (உ-57)

## மன்னார் சம்பவம்: பிரபா ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செப். 25

மன்னாரில் இந்திய அமைதிப் படையினர் ஓர் அப்பாவித் தமிழனைச் சுட்டுக் கொன்றதுடன் 18 பேரைப் படுகாயப்படுத்திய சம்பவம் பற்றித் தமிழீழ மக்களின் சார்பில் எமது பலத்த ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்றோம்.

—இப்படி விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ராஜீவ்காந்திக்கு எழுதியகடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இந்திய சமாதானப் படையினரிடம் மகஜர் ஒன்றை வழங்க முகாமுக்குள் சென்ற மக்கள் மீதே இந்தியப் படையினர் சுட்டனர் என்று எமக்கு முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்தும்படி வேண்டுகின்றேன். அப்பாவித் தமிழ்ப் பொது மக்களுக்கு எதிராக வன்செயலில் ஈடுபட வேண்டாம் என்று தமிழர் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இந்திய அமைதிப் படையினருக்கு உத்தரவிடும்படி உங்களை வேண்டுகின்றேன்.

—இப்படி திரு. பிரபாகரன் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார். (உ-எ-160)

## ரெலோ ...

(1-ஆம்பக்கத்தொடர்ச்சி)

அப்பகுதியில் ரோந்து சென்ற இந்தியப் படையினர் நான்கு இளைஞர்களை ஏ கே. 47 ரக துப்பாக்கிகளுடன் கைது செய்தனர்

எம். கணேஸ், கே. சிலன், ரீ. அலெக்ஸ், எஸ். ஆனந்த் என்ற இந்த நான்கு இளைஞர்களும் தாங்கள் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியப் படையினரிடம் ஒப்புக்கொண்டனராம்.

பின்னர் மாங்குளம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம், கே. பியூட்டெயினிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அக்டோபர் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா பொலீசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது (உ-164)

## கேரள மீனவர்கள் 400பேரைக் காணவில்லை!

புதுடில்லி, செப். 25

கேரள மாநிலத்தில் வட கடலில் மீன்பிடிக்கச் சென்ற சுமார் 400 மீனவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று அஞ்சப்படுகின்றது.

காஸர்கோடுப் பகுதியைச் சேர்ந்த சுமார் 200 மீனவர்களும் —

திருச்சூர்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் 200 மீனவர்களுமே காணமற் போய்விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கடற் கொந்தளிப்பு காரணமாக புதன் இரவில் இருந்து இவர்கள் காணமற் போய்விட்டனர்.

நான்கு விமானப்படை ஹெலிக்கொப்டர்கள் நாள் முழுவதும் இவர்களைத் தேடின.

மீனவர்கள் பற்றி தகவல் எதுவுமின்றி நேற்று மாலை ஹெலிக்கொப்டர்கள் திரும்பின.

இந்தியக் கடற்படைக் கப்பல்கள் மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன. (உ-எ)

## சைக்கிள் - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை காங்கேசன்துறையிலிருந்து நல்லூருக்கு சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் சைக்கிள் ஊர்வலம் ஒன்றைநடாத்தினர். பெரும் எண்ணிக்கையானோர் இந்த ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். (உ-160)

## உண்ணாவிரதம். . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சணக்சான மாணவர்கள் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி நாவற்குழிச் சந்தியிலிருந்து 'நல்லூருக்கு பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

வல்வெட்டித்துறையில் நேற்றுக்காலை 8 மணிக்கு ஆரம்பமான ஊர்வலல் ஒன்று வடமராட்சியின் பல பகுதிகளூடாகச் சென்றபின்னர் மீண்டும் மாலை ஐந்து மணியளவில் வல்வெட்டித்துறையிலேயே முடிவுற்றது. (உ-160-11)

## ஊரடங்கு

திருகோணமலைமாவட்டத்தில் இன்று(வெள்ளி) இரவு 8-00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது

மறுநாள் காலை 4-00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்.

## சங்காபிஷேகம்

வயாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலயம் கடந்த 14-9-87 இல் பிராயச்சித்தம் செய்யப்பெற்று சம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறும். (ஒ)

## ஒத்திவைப்பு

வட்டுக்கோட்டை, செப் 25

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இம் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் மாவட்டத்தில் நடாத்தப்படவிருந்த ஆறும் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் நடைபெறவிருந்த இப் பரீட்சை நாட்டுநிலைமை காரணமாக அப்போது ஒத்திவைக்கப்பட்டது.

★ ★ ★

யாழ்ப்பாணம், செப் 25

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிதிக்காக, காவலூர் இலக்கிய வட்டத்தினரால் நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும் நடத்தவிருந்த நாடகவிழா, நாட்டின் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு ஒத்திவைக்கப் பட்டுள்ளது

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று காவலூர் இலக்கியவட்டம் அறிவித்து உள்ளது, (ஒ-எ)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு. செப். 25

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை 101 பெரும்பான்மை மவாக்குகளில் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (உ-எ)

## ஊர்வலத்தில் பறவைக்காவடி

யாழ்ப்பாணம், செப். 25

நேற்று புன்னாலைக்கட்டுவனில் இருந்து வந்த ஊர்வலத்தில் பறவைக் காவடியும் இடம்பெற்றது

திலீபனின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்த ஊர்வலத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மயிலு சந்திரசேகரம் (அப்பன்) என்பவர் பறவைக்காவடி எடுத்து வந்தார்.

நேற்றுக்காலை 10-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்ட ஊர்வலம், மாலை 4-30 மணியளவில் நல்லூரை வந்தடைந்தது. (ஒ-160)

## மிளகாய் விலை உயர்வு!

கொழும்பு செப் 25

செத்தல் மிளகாயின் கொள்வனவு விலையை வர்த்தக அமைச்சு ஒரு கிலோவுக்குப் பத்து ரூபாவினால் அதிகரித்து உள்ளது.

இதைத் தொடர்ந்து சந்தைப்படுத்தும் திணைக்களம் விவசாயியிடமிருந்து ஒரு கிலோ செத்தல் மிளகாயை 40 ரூபா வீதம் கொள்வனவு செய்யும். (உ-எ)

## சிறில்மத்தியூவின் ஆதரவாளர் இராஜினாமா!

கொழும்பு, செப் 25

முன்னாள் அமைச்சர் சிறில்மத்தியூவின் ஆதரவாளர் எனக் கருதப்படும் யூ என் பியின் ரத்கம எம். பி. திரு. அசோகா சோமரத்ன தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

ராஜினமாவுக்கான காரணத்தை அவர் தனது கடிதத்தில் தெரிவிக்கவில்லை.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தே திரு. அசோகா சோமாரத்ன ராஜினமாச் செய்தார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இப்படி ஓர் எச்சரிக்கை

புதுடில்லி, செப் 25

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்முறையில் ஈடுபட்டால் அமைதிப்படை கடுமையானநடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இவ்வாறு இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை எச்சரித்துள்ளது என்று இந்திய வானொலி தெரிவித்தது.

அரசுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாகவும் இந்திய வானொலி அறிவித்தது. (அ எ)

## இந்திய தகவல்---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஆதாரமற்றகதைகளுக்கு அவை முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

சட்டபூர்வமான குறைபாடுகளின் அடிப்படையில் நடத்தப்படும் எமது அஹிம்சை இயக்கம் பரிகாசம் செய்யப்படுகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அஹிம்சைப் போராட்டத்துக்கும் எதிராகப் பிழையான தகவல்களைத் தெரிவிக்கும் பிரசாரத்துக்கு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

தமிழீழ மக்கள் எமது இயக்கத்துக்குப் பின்னால் அணிதிரண்டுள்ளார்கள். என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இந்திய பிரசாரம் குறித்து மக்கள் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

எமது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எமது அரசியல் இயக்கம் பிறிய குரோதமான பிரசாரம் சமாதான ஒப்பந்தத்தின் குறிக்கோளையே பலவீனப்படுத்துவதாக அமையும்.

தமிழரின் உண்மையான அபிலாஷைகள் குறித்து இணங்கிப்போகக் கூடிய அணுகு முறை தான், ஒப்பந்தத்தை அமைதியாக வெற்றிகரமாக அமுல் நடத்தத் தேவையானது.

ஆகவே, உங்களுடைய நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி எமது இயக்கத்துக்கு எதிரான பிரசாரத்தை தவிர்க்கும்படி அந்த ஸ்தாபனங்களுக்கு உத்தரவிடுங்கள். இவ்வாறு அவர் கோரியுள்ளார். (உ-எ)

## மீண்டும் பஸ்சேவை

யாழ்ப்பாணம், செப். 25

சில நாட்களாகத் தடைப்பட்டிருந்த யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின. (ஒ)

## தமிழ்ப் பொலிஸ்- - -

[1ம் பக்கத் தொடர்ச்சி]

(ஐவர்), ஈரோஸ் ஒருவர்), கூட்டணி ஒருவர்), ஈ.பி.ஆர் எல்.எவ் ஒருவர்), சிங்களவர் (இருவர்), முஸ்லிம்கள் (இருவர்) ஆக இச்சபையின் பிரதிநிதித்துவம் அடங்கும், பிரதம நிர்வாக அதிகாரியை புலிகள் சிபார்சு செய்யலாமென்றும், உப நிர்வாக அதிகாரிகளை (ஒருவர் சிங்களவர், ஒருவர் முஸ்லிம், ஜனாதிபதி நியமிப்பார் என்றும் திரு. டிக்ஸித் தெரிவித்தார்

இந்த நிர்வாக சபை அரசாங்க அதிபர்களின் ஆட்சியதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்குமென்றும், ஆலோசனைகளை வழங்கும் சபையாக இயங்குமென்றும் திரு. டிக்ஸித் மேலும் தெரிவித்தார்.

இப்படியான அதிகாரமற்ற, அரச ஆதிக்கத்திற்கு உட்பட்டவெறும் ஆலோசனைசபையைத் தம்மால் ஏற்முடியாதென புலிகள் திட்டவட்டமாக அறிவித்தனர். பாரதப் பிரதமர் தமக்குத் தந்த வாக்குறுதிகளை ஜெயவர்த்தனாவின் இத்திட்டம் மீறுவதாகவும் சுட்டிக்காட்டினர். இந்த ஆலோசனை சபையை ஏற்று போராட்டத்தை கைவிடுமாறு இந்திய தூதர் விடுத்த வேண்டுகோளை புலிகள் நிராகரித்தனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்திற்கான ஒரு மாற்றுத்திட்டம் கேட்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் பெரும்பான்மைப் பங்களிப்புக் கொண்டதும் வடகிழக்கை நிர்வகிக்கும் ஆட்சியதிகாரம் கொண்டதும், தமிழ் பொலீஸ் படை இடைக்கால அரசால் அமைக்கக் கூடியதுமான ஒரு இடைக்கால நிர்வாக அரசு அமையப் பெறவேண்டும் என்று புலிகள் தெரிவித்தனர். அதன் அமைப்பு, அதிகாரம், பிரதிநிதித்துவம் பற்றிய சில யோசனைகளையும் புலிகள் தெரிவித்தனர் விடுதலைப் புலிகளின் யோசனைகளை தாம் இந்திய இலங்கை அரசுடன் பேசி முடிவெடுக்க வேண்டுமென்று திரு. டிக்ஸித் தெரிவித்தார். (அ)

யா/ ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

6 ஆம் ஆண்டு வகுப்பிற்கான
பிரவேசப்பரீட்சை 1988

தமிழ், கணிதம், ஆகிய பாடங்களில் மேற்படி பரீட்சை 07-11 87 இல் நடைபெறும் தற்போது ஆண்டு 5 இல் கற்பவரும் 01-02-77 க்குப் பின் பிறந்தவருமான மாணவர் விண்ணப்பிக்கலாம்.

13''X8'' அளவுடைய கடதாசியில் பெயர், பிறந்த திகதி, பாடசாலை, விலாசம் ஆகியவற்றுடன் 20-10 87 க்குமுன் விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக ரூபா 10 உம் சுய விலாசமிடப்பட்ட நீள் கடித உறை இரண்டும் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

திரு. சி. பொ. பாலசிங்கம்
அதிபர்
யா/ ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org